806

[illegible] No. M. 1630. JUNE. 1923.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷுல் மஹறிபா என்னும்

# ஞானசூரியன்

இது ஒரு நிகரில்லாத இனிய மாத சஞ்சிகை.

# GNANA SURIYAN

## A HIGH CLASS TAMIL MONTHLY.


மலர் 2 } ருத்ரோற்காரி௵ ஆனி௴ 1உ / 1923௵ ஜூன்௴ 15உ { இதழ் 3

Vol. II. No. 3.


பொருளடக்கம்.


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| கடவுள் வணக்கம் | 49 |
| பிராணாயாமயோகம்—யோகரகசியம் | 50 |
| சாதுசங்க விசாரணை—மணிமுத்துநாயகம் | 54 |
| அடியார் நிந்தை—மணிமுத்துநாயகம் | 57 |
| சந்திரம்—பணம் | 60 |
| இனியவை கூறல்—ப. வீரப்பத்தஞ்சவராயன் | 67 |
| தாம்பூலத்தின் குணம்—க. ஞானபூபதி | 70 |


இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி
எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

## "ஞான சூரியன்"

### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ 1—8—0 |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ 0—3—0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனாமாக அனுப்பப்படும்

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலா மேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அசனால் தங்களுக்கு 3 அணு சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

---

### விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு | ... | ரூபா | 7—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 4—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 2—8—0 |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ வீதம் கழித்து வாங்கப்படும் எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும். நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

### விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு, பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனமாக அனுப்புவதுடன் அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.

கருணையானந்த ஞானபூபதி,
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத்துணை.

# ஸம்ஷூல் மஹறிபா என்னும்

# ஞானசூரியன்.

இது ஒரு இனிய மாதாரம்பத் தமிழ்ப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 2.] ருத்ரோற்காரி வரு ஆனிமீ 1௳. [இதழ் 3.

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

காணரிய வல்லவெல்லாந் தானே கட்டுக்
கட்டாக விளையுமதைக் கட்டோ டேதான்
வீணினிற் கர்ப் பூரமலை படுதீப்பட்ட
விந்தையெனக் காணவொரு விவேகங் காட்ட
ஆணுறக்க மின்ப துன்பம் பேருமாகி
யொவ்விடவு மெனைப்போல வுருவங் காட்டிக்
கோணறவோர் மான்காட்டி மானை யீர்க்குங்
கொள்கையென வருண்மௌன குருவாய் வந்து.

(தாயுமான வள்ளல்.)

# ஞான சூரியன்

### இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

## பிராணுயாமயோகம்.

(இரண்டாம் மந்திரம்)

பிராணுயாமம் என்பதாவது, பிராணன்-பிராணனை, ஆயாமம் - தடுத்தல். அதாவது பிராணனை வெளிச் செல்லவிடாது தடுத்தல் என்று பொருள் பெறும்.

**கூர்மபுராணம்.**

இவைமுத லாகநூலோ ரியம்பும் ஆசனங்கள் தம்மில்
உவகைகூ ராசனத்தி னிருந்துயர் யோகஞ் செய்தல்
நவையில தாகும் யாக்கை நண்ணிய வளிபிராணன்
தவலற வதை நிறுத்தல் தன்னையா யாமமென்பார்.

பிராணுயாமம் என்பது சுவாசத்தைப்பற்றிய விஷயமென்று அநேகர் நினைக்கிறார்கள். ஆனால் அது தவறு. சுவாசமானது பிராணுயாமத்தை அடைதற்குரிய ஓர் சாதனமாகும். (ஒரு அரசனை மந்திரி தன் வசப்படுத்தி ஆள்வதுபோல்) பிராணனை அடக்கி யாள்வதற்குத் தான் பிராணுயாமம் என்று சொல்லப் பெறுகிறது.

பிராணுயாம யோகமானது, இரேசகம், பூரகம், கும்பகம், சூனியகம் என நான்கு வகையாக வகுக்கப் பெற்றிருக்கிறது. சூனியகம் என்பதற்கு கேவல கும்பகம் என்று மற்றொரு பெயரும் உண்டு. கேவல கும்பகமானது, இரேசக பூரகமின்றி மனதை நிறுத்துவது. இஃது உயர்தர நிலையாம். இவ்வப்பி

யாசத்தைத் தான் இராசயோகம் என்று மேற்கூறி யிருக்கின்றது. இனி இரேசக பூரக கும்பகத்தைப் பற்றிச் சொல்லுவாம்.

இரேசகம், கும்பித்த (உள்ளுக்கிழுத்து நிறுத்திய) வாயுவை (32) மாத்திரை நேரம் சிறிது சிறிதாக வெளியில் விடுதல்.

பூரகம், வெளியிலுள்ள பரிசுத்தமான வாயுவை, நாசித் துவாரத்தின் வழியாக (16) * மாத்திரை நேரம் சரீர அசைவின்றி மிருதுவாக உள்ளுக்கிழுத்து வாங்குதல்.

கும்பகம், உள்ளுக்கிழுத்த வாயுவை வெளியில் விடாமல் (64) மாத்திரை நேரம் நிறுத்திவைத்தல். பூரகம் செய்யாமல் கும்பகம் செய்தல். அதாவது வெளியேறின வாயுவை வெளியிலேயே யிருக்கும்படிச் செய்தல். இது மற்றொருவித கும்பகமாம். இவ்விதம் செய்வதனால் சரீரம் இலகுத்துவத்தை அடைகிறது.

ஔவைக் குறள்.

முன்ன மிரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி.

இங்கு பூரகத்தைக் காட்டிலும் இரேசகத்திற்கு மாத்திரை அதிகமாய்ச் சொன்னது. இரேசகத்தை அவ்வளவு மெதுவாகச் செய்யவேண்டுமென்பது கருத்து.

---

* மாத்திரை என்பது:—ஒருவர் நித்திரை செய்யும்போது சுவாசமானது, எவ்வளவு நேரம் இயற்கையாகச் சென்று திரும்புகிறதோ, அதுவே பிராணயாம மாத்திரையாம். அன்றியும் பெருவிரலை நடுவிரலோடு சேர்த்து மூன்றுமுறை சுண்டுதலையும், முழந்தாளை இடக்கரத்தால் (16) முறை சுற்றுவதையும், அங்ஙனஞ்செய்ய இயலாதார்க்குக் கைந்நொடிப் பொழுதையும் மாத்திரை என்பர்.

உத்தம பிராணயாமம் (48) மாத்திரை-மத்திமம், (24) மாத்திரை-அதமம், (12) மாத்திரையென்று கூறப் பெற்றிருக்கிறதுங் கவனிக்கத்தக்கது.

சிவதருமோத்தரம்.

கைத்தலத் தாலே சானுப் புரிவலங் கணிக்க வீரொட்
டத்தொகை யனைத்து மொன்றே யாகுமாத் திரையா யாமத்
துத்தம நாற்பத் தெட்டாம் ஒருபது மிரண்டும் நீசம்
மத்திம மெண்மூன் றுங்கை நொடிப்புமாத் திரைமாட் டார்க்கே.

அகஸ்தியர்.

என்னவே ரேசகமுப் பத்தி ரண்டு
இயலான பூரகமோ பதினா றாகும்
உன்னவே கும்பமறு பத்து நாலு
உயர்ந்து நின்ற பிராணயங் குருசொற் கேட்டு.

திருமந்திரம்

ஏறுதல் பூரக மீரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பக மறுபத்து நாலதி
லூறுதல் முப்பத்தி ரண்டதி ரேசகம்
மாறுதலொன் றின்கண் வஞ்சக மாமே.

வாமத்தி லீரெட்டு மாத்திரை பூரித்தே
யேமுற்ற முப்பத்தி ரண்டுமிரே சித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக விவ்விரண்
டோமத்தா லெட்டெட்டுக் கும்பிக்க உண்மையே.

ஔவைக்குறள்.

இரேசக முப்பத் திரண்டது மாத்திரை
பூரகம் பத்தாறு புகும்.

கும்பகம் நாலோ டறுபது மாத்திரை
தம்பித் திடுவது தான்.

இவ்வாறு மாத்திரையின் அளவு கூறியிருக்க, பூரகம் (32) மாத்திரை யென்றும், இரேசகம் (16) மாத்திரையென்றும் இப்படியே புசுண்டர் செய்தனர் என்றும் போகர் ஆயிரத்தில்,

ஆடவே அவர்செய்த வகையே தென்னில்
ஐயமாங் கும்பகம் அறுபத்து நாலு
பூடவே பூரகந்தான் முப்பத்தி ரண்டு
புகையான ரேசகந்தான் பதினா றாகும். எனவும்,

கோங்கணர் கடைக்காண்டம்.

விளம்புகிறேன் பூரகமுப் பத்தி ரண்டு
மேலான கும்பகந்தான் அறுபத்து நாலு
விளம்புகிறேன் ரேசகந்தான் பதினா றாகும்
விரிவான மாத்திரைதா னறியச் சொன்னேன்.

னவும் பூரகத்தைக் கூட்டியும் இரேசகத்தைக் குறைத்தும் வேறுவிதமாகக் கூறியிருப்பதால் மாத்திரை பேதப்படுவது கவனிக்கத்தக்கதே. அன்றியும் சிலர் பூரகம் (12) மாத்திரையாகவும் இரேசகம் (32) மாத்திரையாகவும், சிலர் (12) அங்குலம் ஓடும் சுவாசத்தை முதலில் (10) அங்குலத்திற்கும் பிறகு (8) அங்குலத்திற்கும் ஓடச்செய்து அப்பியாசிக்கிறார்கள். ஆகையால் இவை ஒன்றற்கொன்று மாத்திரை முரணாகக் காணப்பெறினும் அவரவர் சரீர திடத்துக்குத் தக்கபடி கூட்டியுங் குறைத்துஞ் செய்துகொள்ள வேண்டுமென்கிற நியாயமிருத்தலால் முரணாக மாட்டாது.

மேற்கூறிய மாத்திரை அளவின்படி அப்பியாச ஆரம்பத்தில் சுவாசபந்தனஞ் செய்வது அருமை. ஆதலால், காலவரையின்றிச் சதாவேளையும் அதாவது இருக்கும்போதும், நடக்கும்போதும், நிற்கும்போதும், படுத்திருக்கிறபோதும், க்ஷவரம் பண்ணிக்கொள்ளுகிற காலத்தும், ஏதாவது ஒன்றைப் புசிக்கும்போதும், மாதர்களுடன் சம்போகம்பண்ணும் காலத்தும், ஏனைய சமயங்களிலும் சுவாசத்தை வீணாகப் போக்காமல் மெல்ல மெல்ல அப்பியாசித்து, சுவாசம் வசப்படுகிற காலத்தில் மாத்திரை அளவைக் கவனித்தல் வேண்டும்.

**அகஸ்தியர்.**

உண்ணும்போது உயிரெழுத்தை உயர வாங்கு
உறங்குகின்றபோதெல்லாம் அதுவே யாகும்
பெண்ணின்பால் இந்திரியம் விடும்போ தெல்லாம்
பேணிவல மேனோக்கி யவத்தில் நில்லு
தின்னுங்கா யிலையருந்து மதுவே யாகும்
தினந்தோறு மிப்படியே செலுத்த வல்லார்
மண்ணூழி காலமட்டும் இருப்பார் பாரு
மறலிகையில் அகப்படவு மாட்டார் தாமே.

சுவாசத்தை மேற்கூறியபடி சிறிது சிறிதாக ஏற்றியிறக்கிப் பழக்கம் செய்யாமல், கொனியுண்டாகும்படி சிறிச்சிறி யிழுத்துக் கடினமாக ஏற்றினால், அது ஒருபோதும் நமது வசப்

யாது. சிங்கம், புலி, கரடி, யானை முதலிய துஷ்ட விலங்கினங்களைப் பிடித்து, எப்படி நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக வசப்படுத்துகிறார்களோ, அப்படியே சுவாசத்தையும் சிறுகச் சிறுக அதன் இயற்கைப்படியே சிறுகச்சிறுக செலுத்தி வசப்படுத்தவேண்டும். அங்ஙனமின்றி ஆவற்பெருக்கத்தால் விரைவாகப் பூரித்தால், சிங்கம், புலி முதலியவற்றைப்போல், அப்பியாசியை பற்பல ரோகத்திற்குள்ளாக்கிக் கொல்ல எத்தனிக்கும். சரீரத்தில் பலக்குறைவும் உண்டாகும். சுறுக்கமாகச் சொல்லுமிடத்து, பொருத்தமான அப்பியாசமானது, சர்வரோகங்களையும் நாசமாக்கி, ஆத்துமாநுசந்தானப் பழக்கத்திற்கு உதவியாக நிற்கும். பொருத்த மின்றிய அப்பியாசமானது, சகல பிணிகளையும் சம்பவிக்கச் செய்யும்.

(இன்னும்வரும்) யோகரகசியம்.

---

## சாதுசங்க விசாரணை.

(39-ம் பக்கத் தொடர்ச்சி.)

காண்பதுவுந் தீதே' எனவும், 'நல்லிணக்கமல்லது அல்லற் படுத்தும்' எனவும், 'பெரியாரைத் துணைக்கொள்' எனவுங் கூறியிருப்பது தமது அனுபவத்தின் முதிர்ச்சியாலன்றோ?

'பெரியாரைத் துணைக்கொள்' என்றதனால் நாம் எக்காலத்தும் பெரியோரையே நேசிக்கவேண்டும். அவர்கள் நேசத்தை ஒருபொழுதும் கைவிடலாகாது. அனேகரது பகையைத் தேடிக் கொள்வதனால் வரும் தீமையினும் ஒரு பெரியோரது நட்பை யிழந்துவிடுவதனால் வரும் தீமை பதின்மடங்கு அதிகமாகும். இதுபற்றியே தமிழ்வேதம்,

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்."

என்று கூறியிருக்கிறது.

'சேரிடம் அறிந்துசேர்' என்பதற்கேற்பக் களங்கமில்லாத பொன்போலும் உண்மை நெறியோராகிய பெரியோர்களை

அறிந்து அவர்களிடம் சேர்ந்து அவர்கள் சொற்படி நடக்கவல்லவர்கட்கு, அறம், பொருள், இன்பம், வீடு என்பவைகளில் எது தான் அரிதாகும்: கற்பகத்தருவைச் சார்ந்த காகமும் அமுத முண்ணும் அன்றோ?

முருகுவிரி மலர்க்கொடிகள் மூங்கில்மிசை படர்ந்துபோய்ப்
பொருவரிய துறக்கத்துப் புகுந்துவளர் கற்பகமாம்
மாமுழுதும் படர்ந்துலவும் வளர்மதியின் மேலாய
பெரியவரை யடைந்தொழுகப் பெறிற்றுறக்கம் புகலரிதோ.

திருக்குறள்.

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு.

மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானாம்
இன்னா னெனப்படுஞ் சொல்.

சிறுபஞ்சமூலம்.

பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள் வெளவன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின்,

சாதாரண மழைத்துளியானது, முத்துச்சிப்பியைச் சார்ந்து தாளமாகிறதென்றும்; அதே மழைத்துளி சிப்பியில் விழாமல் ஓர் தாமரையிலையில் விழுந்தால் முத்தைப்போன்ற வெண்மையை மட்டிலும் பெறுகிறதென்றும்; அதே மழைத்துளி நிலத்தில் விழுந்தால் முத்தும் ஆகாமல் முத்தைப்போன்ற வடிவமும் ஆகாமல், அது இருக்கும் இடம் தெரியாமலே மறைந்துபோகின்றது என்றும்; அது, சேர்ந்த இடத்தினால் பெருமையும் சிறுமையும் அடைந்ததென்றும் பல நூற்களில் படித்திருக்கின்றோம். அதுபோல் மானிடராகப் பிறந்த எல்லோர்க்கும் ஒரே அறிவுதான்: ஒரே ஆத்மாதான். அங்ஙனமிருக்க அவர்கள் எந்த இடத்தைச் சேர்ந்து பழகுகிறார்களோ, அந்தச் சகவாசத்திற்குத் தக்கபடி அவர்களது அறிவும் உயர்வு, தாழ்வு என்னும் பதத்தை அடைகின்றது. இதற்குத் திருட்டாந்தமாக மேனாட்டார் ஒரு பழமொழி வழங்குகின்றனர். அதாவது:—

If you want to know the character of a man, see who his friends are.

(இதன்பொருள்) ஒருவருடைய நடவடிக்கைகளை அறிய வேண்டுமானால் அவரது சிநேகிதர்கள் யார் என்று பார். (என்பதாம்.)

ஆதலால் நாம் நம்மிலும் உயர்வான ஞானம், கல்வி, கேள்வி, ஒழுக்கம், கருணை, சாந்தம், தெய்வ வழிபாடு முதலிய நல்லொழுக்கம் உடையவர்களிடத்திலேயே சிரமப்பட்டாகிலும் பழகவேண்டும்.

திருக்குறள்.

அரியவற் றுளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பட்டினத்தடிகள்.

நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளும் மைந்தரும் சுற்றமும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேஇறை வாகச்சி யேகம்பனே.

நமது ஆங்கிலேய துரைத்தனத்தார், சாதியில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று கருதாமல், அறிவினாலும் படிப்பினாலும் சிறந்தவர் எவரோ அவருக்கே அவர் அந்தஸ்துக்குத் தக்க உத்தியோகத்தை அளிக்கின்றனர். அதுபோல் அறிவினால் சிறந்தவர் எவரோ அவர் எந்தக் குலத்திற் பிறந்திருந்தாலும் உயர்ந்தவர். அறிவில்லாதவன் எவனோ அவன் எவ்வித உயர் குலத்தில் பிறந்திருந்தாலும் அவன் கழுதையிலும் கீழான சென்மமே யாவான்.

வெற்றிவேற்கை.

கற்பார் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே.

நாலடியார்.

தோணி யியக்குவான் தொல்லை வருணத்திற்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்.

உண்மையான சாதுசங்கப்பழக்கமோ கிடைப்பதும், சாதுக்கள் ஒருவன்மீது பூரண அன்பு செலுத்துவதும் அரிதாக இருக்கின்றது. மூடர்கள் சங்கமோ மிக எளிதாக இருக்கின்றது. பிறர் துக்கம் தன் துக்கமாகப் பாவிக்கும் தயையானது சில மகான்களுக்கு இல்லாமையால் எவ்வளவு தொண்டு செய்தாலும் கிருபை உண்டாவதில்லை; ஒருவரைத் தனக்குத் தொண்டனாகச் சாமானியத்தில் சேர்த்துக்கொள்வது மில்லை. பெரும்பாலும் அத்தன்மை உடையவர்களிடத்திலேயே உண்மையான மெய்ஞ்ஞான நெறி இருக்கின்றது. மற்றவர்கள், புலி பசுவேடம் போட்டுக் கொண்டதைப்போல் இருக்கிறார்கள். ஆயினும் சில சமயங்களில் நல்லவர்களானாலும் ஆவார்கள். இதற்குத் திருட்டாந்தமாகப் பின் வருவதைக் காண்க.

(இன்னும் வரும்)

மணிமுத்துநாயகம்.

---

## அடியார் நிந்தை.

(29-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிரபஞ்சமானது அநித்தியமென்று சுருதி யுக்தி யனுபவத்தால் கரதலாமலகம்போல் நன்குணர்ந்தவர்களும் பொய்யாகிய பிரபஞ்சத்திலேயே கட்டுண்டு, ஆவரண சக்தியின் மறைப்பால் தன்னை யறியாமல் சில சமயங்களில் மயங்குவார்கள். அதுபோல் நாம் ஒருவரைப் புகழாவிட்டாலும் இகழாமல், தன்னைக் காத்துக் கொள்வதே புகழ்வதிலும் பன்மடங்கு மேன்பாடுடையதெனப் பலகால் வியந்து சொல்லும் சில விவேகிகள்,

> "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

என்னும் திருக்குறள் கருத்தை மறந்துவிட்டுத் தன்னையறியாமலோ வேறு எந்த காரணத்தினாலோ இகழ்ச்சிபண்ண ஆரம்பிக்கிறார்கள். இவர்கள், நம்மை மற்றொருவன் இகழ்வாகப் பேசினால் அது நமக்குத் திருப்தியாயிருக்குமா என்பதையும் அஹிம்ஸா பரமசுருபம் என்பதையும் சிறிது யோசித்துப் பார்த்தால் அவ்விதம் பிறரைத் தூஷிக்கமாட்டார்கள். தனக்கு புகழ்

வேண்டுமென்னும் விருப்பமுள்ளவர்கள் பிறரை யிகழாமலிருப்பதே முறையென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

மஹான்களிடத்துள்ள நற்குணம் நற்செய்கைகளை வியந்து புகழ்ந்து பேசுபவர்கள் ஆயிரத்தில் ஒருவரும், அவர்களிடத்தில் பிரபஞ்சத்தார் கருத்துக்கு விரோதமாக இலைமறை காய்போல் ஏதாவது காணப்படின் அகனைத் தூற்றித் திரிவோர் ஆயிரத்தில் தொளாயிரத்துத் தொண்ணூற்றென் பதின்மருமாகக் காணப்படுகிறார்கள்.

ஐந்தாறு வருடங்களுக்குமுன் கலியுகாதி 5014, 15-ல் பிரமாதீச ஆனந்த வருடங்களில் சுமார் நான்குவருட காலம் நாகப்பட்டணத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமௌன சுவாமிகளைப்பற்றி இச்சென்னை இராஜதானிக்குள் பெரும்பாலும் தெரியாதார்களில்லை. அவரை ஆரம்பத்திலேயே விசேஷமாகக் கொண்டாடி புகைப்படம் (Photograph) பிடித்து பூஜை முதலியவைகளும் செய்து வந்தார்கள். கொஞ்சகால மானவுடனே ஷடி சுவாமிகள்மீது பலவிதக்குறைகூற ஆரம்பித்தார்கள். அவர் எத்தன்மையுடையவராயிருந்தாலும் சரி. நாலுவருடகாலம் வரையில் பிறருடன் சம்பாஷிக்காமலும் பஞ்சேந்திரியங்களின் வழியே சென்றுழன்று சஞ்சரிக்காமலும் இருந்தார் என்பது உலகமறிந்த விஷயம். அவ்வாறு வேறோர் சாதாரண மனிதன் ஒருமணி நேரமாவது இருக்கமுடியுமா? அப்படியிருக்க எண்ணினால், மனமானது அடங்காமல் பஞ்சேந்திரியங்கள் வழிபாகச்சென்று விடயங்களைக் கவர்ந்துழலுமாதலால் அவனை ஓரிடத்திலேயே நிலைபெற்றிருக்க விடாது. எல்லாரும் மனத்தையடக்கி யாள்வதென்றால் மிக்க அருமை. சிலர் நித்திரை செய்யும்போது மனம் அடங்கியிருக்கிறதேயென்று கேட்பார்களாயின், நித்திரை செய்யும்போது மனமானது இந்திரியங்களின் வழிபாகச் செல்லாததினால் நித்திரை சுகமாக இருக்கிறதேயன்றி மனம் விடயங்களைக் கவர்ந்துகொண்டிருக்கும்போது நித்திரை வருவதில்லை வராது. இதற்கு வியாகூல முடையவர்களையும் வியாதியஸ்தர்களையும் திருஷ்டாந்தமாகக் காணலாம். ஒருவர்க்கு மனம் அடங்கியதை

யும் அடங்காததையும் (*) சாக்கிராவத்தையிலல்லவா பார்க்க வேண்டும். ஆகையால் சிறிதுநேரமேனும் ஒருவித யோகாப்பியாசம் செய்தவர்களும் கால்வீசம், அரைவீசம் ஞானியேயன்றி அவர்களை வீணர்களாக எண்ணி நிந்திக்கக்கூடாது.

குணங்குடி வள்ளல்.

சொல்லு மெய்ஞ்ஞானச் சுகக்கடலை யுண்டுநான்
சும்மா விருக்க வருள்வாய்
சுத்தபரி பூரணச் சுகவாரி தன்னிலோர்
சொட்டாகி னுந்தொட்ட பேர்
நல்லவர்கள் நல்லவர்கள் நல்லவர்க ளென்றைக்கும்
நானும் நல்லவ னவனே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

சிவஞான வள்ளல்.

ஆன்றநற் சனகனாதி நால்வரு மரன்முகத்தை
மூன்றரைக் கோடிகற்பம் பார்த்தபின் முத்தரானார்
தோன்றிநின் றழியுமிந்த தொடுகடற் புவியினுள்ளோ
ரூன்றியோர் கணமதேனும் பார்த்திடி னுறுவர்மூர்த்தி.

அறிவிலறிவா யகண்டிதமா யனந்தானந்த மயமாகிச்
செறியும்பரம சிவந்தன்னைத் தன்னுட்கண்டு தியானித்துக்
கறவையருந்தப் பால்சுரக்குங் காலமேனுங் கடைப்பிடிப்போர்
பிறவிக்கடலைக் கடந்தோர்க ளவரேயுலகிற் பெரியவரே.

ஆக்கறக்கு மந்நேர மம்புவிழு மந்நேரம்
நோக்கிமைக்கு மந்நேரம் நுண்ணறிவால்—நீக்கமற
நானென்னும் போதம் நழுவிச்சிவ மானார்க்கு
ஈனபிறப் புண்டோ இனி.

நெருப்பிற் கொளுத்திய தீபம் உருவத்திற் சிறியதாயிருப்பினும், அதுவும் சிலதூரம் வரையில் இருளை அகற்றும். அது போல் ஒருவர் தத்துவஞானத்தைச் சிறிது அநுட்டித்திருந்தாலும் அத்தவம் அனேக பாவங்களைப் போக்கிவிடும்.

---

(*) சாக்கிரம், இதன் விபரம் விரிவாக இருப்பதால், 3-ம் பாகம் யோக ரகசியத்தில் ஐந்தவஸ்தைகள் என்ற தலைப்பின் கீழ்க்காண்க.

சில வண்டுகள் அழகிய புஷ்பங்களில் ததும்பிய தேனையே தேடித்திரியும். சில வண்டுகள் பரிமளமான புஷ்பங்கள் எதிர்ப் பட்டாலும் அவற்றிலுள்ள பசிய தேனைப் புசிக்க அறியாமல், துர்க்கந்தமான மலங்களையே உருட்டிக்கொண்டு செல்லும். பறையர்கள் பசுமாட்டிலுள்ள பால், நெய் முதலானவைகளை அதிகமாக விரும்பாமல், அதன் மாமிசம், தோல், எலும்பு முத லானவைகளை அதிகமாக விரும்புகிறார்கள். அவைபோல் சில விவேகிகள் மகான்களிடத்துள்ள நற்குண நற்செய்கைகளையே ஆராய்ந்தறிந்து மகிழ்வுற்று,

(இன்னும் வரும்) மணிமுத்து நாயகம்.

---

## சத்திரம்.

சத்திரமாவது ஞானிகள் துறவிகள் முதலிய பெரியோர்க ளுக்கும், தொழில்செய்து சீவனஞ்செய்யச் சத்தியில்லாதவர்க ளாகிய குருடர் முடவர் வியாதியாளர் வயோதிகர் சிறுபிள்ளைகள் என்பவர்களுக்கும், அன்னதானம் நடத்தற்கும், வழிப்போக்கர் கள் தங்குதற்கும் உரிய இடமாம்.

கல்வியறிவும் நற்குண நற்செய்கைகளும் ஈசுரபத்தி அடி யார் பத்திகளும் உடையவர்களைச் சத்திரத்துக்கு அதிகாரிக ளாக நியோகித்தால், சத்திரம் நன்றாக நடக்கும். பேராசையும் வன்கண்மையும் பொறாமையும் துரபிமானமும் உடையவர்க ளைச் சத்திரத்துக்கு அதிகாரிகளாக நியோகித்தால், சத்திரம நன்றாக நடவாது. ஆகலினாலே, சத்திரங் கட்டுவித்தவர் சத்தி ரத்துக்கு யோக்கியர்களையே அதிகாரிகளாக நியோகித்து சத்திர தருமங்களைச் சிரத்தையோடு விதிப்படி நடத்திவைக்கவும் காலந் தோறும் தாம் பிறிது வேடந்தரித்துக்கொண்டு சென்று அச்சத் திர தருமங்களை ஆராய்ச்சி செய்யவும் வேண்டும்.

பசிதாகங்கள் எல்லாச் சாதியாருக்கும் உள்ளனவேயாகவும், பிராமணருக்கு அன்னதானஞ்செய்வதே தருமமென்றும், மற் றைச் சாதியாருக்கு அன்னதானஞ்செய்வது தருமமன்றென்றும்

நம்மவர்கள் பெரும்பான்மையும் எண்ணுகின்றார்கள். இவ்விபரீதசிந்தனத்தினாலன்றோ, நம்மவர்கள் பெரும்பான்மையும் சத்திரத்திலே பிராமணருக்கு மாத்திரமே அன்னதானஞ் செய்கின்றார்கள்.

வறியவருக்குக் கொடுப்பதே தருமம் செல்வருக்குக் கொடுப்பது தருமமன்று; "வறியார்க்கொன் றீவதே யீகை" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார். வறியவருள்ளும், நல்லொழுக்க முடையவருக்குந் தொழில்செய்து சீவனஞ்செய்யச் சத்தியில்லாதவருக்குங் கொடுப்பதே தருமம்; தீயொழுக்கமுடையவருக்குந் தொழில்செய்து சீவனஞ்செய்யச் சத்தியுடையவருக்குங் கொடுப்பது தருமமன்று. பிராமணரெல்லாரும் வறியவருமல்லர், மற்றைச் சாதியாரெல்லாருஞ் செல்வருமல்லர். பிராமணரெல்லாரும் நல்லொழுக்கமுடையவருமல்லர் மற்றைச் சாதியாரெல்லாருந் தீயொழுக்க முடையவருமல்லர். பிராமணரெல்லாருந் தொழில்செய்து சீவனஞ்செய்யச் சத்தியில்லாதவருமல்லர், மற்றைச் சாதியாரெல்லாருந் தொழில்செய்து சீவனஞ்செய்யச் சத்தியுடையவருமல்லர். வறுமை செல்வங்களும், நல்லொழுக்கந் தீயொழுக்கங்களும், தொழில்செய்யுஞ் சத்தியினது இன்மை உண்மைகளும் எல்லாச் சாதியாரிடத்தும் உண்டு. இப்படியிருக்க, பிராமணருக்கு மாத்திரங் கொடுப்பது தருமமென்றும் மற்றைச் சாதியாருக்குக் கொடுப்பது தருமமன்றென்றுங் கொள்வது பேதைமையே.

பிராமணர்கள் விளைநிலந் தோட்ட முதலியவை உடையவர்களேயாயினும், வட்டிக்குப் பணங் கொடுத்திருப்பவர்களே யாயினும், வேளாண்மை வாணிகம் இராசசேவை முதலிய தொழில்கள் செய்பவர்களேயாயினும், சத்திரங்களில் நம்மவர்கள் அவர்களுக்கே மிக்க உபசாரத்தோடு அன்னங் கொடுக்கின்றார்கள். மற்றைச் சாதியார்களோ வறியவர்களாயும் தொழில்செய்து சீவனஞ்செய்யச் சத்தியில்லாதவர்களாயும் இருப்பினும், அவர்கள் பசியினாலே மிகவருந்திச் சத்திரத்து வாயிலே வந்தபோது, நம்மவர்கள் அவர்களுக்குக் கஞ்சியாயினுங் கொடாது, அவர்

களை வன்கண்மையோடும் தூர்வார்த்தைகளினுலே வைதும், பிடர்பிடித்துத் தள்ளியும் ஓட்டிவிடுகின்றார்கள்.

ஈசுரத்துரோகம், சந்தியாவந்தனஞ் செய்யாமை, கொலை, களவு, மதுபானம், மாமிசபக்ஷணம், விபசாரம், பொய்ச் சான்று சொல்லல், பொய்வழக்குப் பேசல், சூதாடல் முதலிய பாவங்களையே செய்பவர்களாயினும் பிராமணவருணத்தார்களே யாயின், சத்திரங்களில், அவர்களுக்கு நெய் தயிர் பாயாசம் வடைமுதலியவற்றோடு விலாப்புடைக்க அன்னங்கிடைக்கின்றது. இப்பாவங்கள் இல்லாதவர்களாய் அறிவொழுக்கங்களினுற் சிறப் புற்றவர்களேயாயினும், பிராமணரல்லாத மற்றைச் சாதியார்க ளாயின், அவர்களுக்குச் சத்திரத்திலே ரசமுஞ் சாதமுமாயினும் கிடைப்பது அரிதரிது.

சிவதருமோத்தரம்.

புலையரே யெனினுமீசன் பொலங்கழ லடியிற்புந்தி
நிலையரே லவர்க்குப்பூசை நிகழ்த்துத னெறியேயென்றுந்
தலையரே யெனினுமீசன் ரும்மைத் தாளிநேச
மிலரெனி னியற்றும்பூசைப் பலந்தரு வாரேயாரே.

குரவன்றனக்கு நிதிமுதலுங் கொடுக்ககுன்றாக் குணமொழுக்கம்
விரதமுடைய வேதியர்க்கும் விழைவாற்பதமு மிசைவிக்க
பரமனடியா ரவர்தமக்கும் பங்குகாலர் பாலருடல்
விரவுநோயர் விழியிழந்தார் விருத்தர்தமக்கும் விருப்புறவே.

பிராமணர் தம்முடைய வீட்டிலே பிராமணரேயன்றி க்ஷத் திரியர் வைசியர் சூத்திரர் அதிதிகளாய் வந்தாலும் அவர்களுக்கு அன்னபானீயங் கொடுத்தல்வேண்டும் என்று தருமசாஸ்திரத் தில் விதிக்கப்பட்டிருக்கின்றது. சாதியினுல் உயர்ந்தவர் ஒத்த வர் தாழ்ந்தவர் என்னும் முத்திறத்தாருள்ளும் பசிதாகங்களி னுல் வருத்தமுற்று வந்தவர் யாவரேயாயினும் அவருக்கு அன்ன பானீயம் கொடுத்தல் வேண்டும். என்பதே உண்மை நூற்றுணிவு; இதுவே யுத்தி அநுபவங்களுக்கும் ஒத்தது: இங்ஙனமாகவும், பிராமணர் கட்டுவித்த சத்திரங்களிலே பிராமணருக்கு மாத்தி ரம் அன்னம் கிடைக்கின்றது; மற்றைச் சாதியார்கள் கட்டுவித்த

சத்திரங்களிலும் அந்தப் பிராமணருக்கு மாத்திரமே அன்னங் கிடைக்கின்றது. பிராமணப் பிரபுக்கள் தங்கள் சாதியாருக்கு மாத்திரம் உதவிசெய்ய, மற்றைச்சாதிப் பிரபுக்களும் அந்தப் பிராமணருக்கு மாத்திரமே உதவிசெய்து, தங்கள் தங்கள் சாதியார்களையும் மற்றைச் சாதியார்களையும் கைவிடுவார்களாயின், பசியினால் வருந்தும் மற்றைச் சாதியார்களுக்குப் புகலிடமாவார் யாவரோ! அறியேம்! அறியேம்! இஃதென்னை கொடுமை! கொடுமை!

சத்திரந்தோறும் போசனஞ்செய்துகொண்டு சோம்பேறிகளாய்த் திரியும் பிராமணர்கள் தங்களுக்காயினும் பிறருக்காயினும் யாது நன்மையைச் செய்கின்றார்கள்! அவர்கள், தங்களுக்கு அன்னம் எளிதிலே கிடைத்தலினாலன்றோ, விபசாரம் பொய் சூது முதலிய பாவங்களிலே தங்கள் காலமெல்லாம் போக்குகின்றார்கள். அவர்கள் செய்யும் பாவங்களெல்லாவற்றிற்கும் சத்திரபதிகளே காரணமாயிருக்கின்றார்கள். வேதாகமங்களையும் அவற்றின் வழிநூல் சார்பு நூல்களையும் படிப்பவருக்கும், படிப்பிப்பவர்க்கும், சனங்களுக்குச் சமயநெறியைப் போதிப்பவருக்கும், தேவாலயங்களிலே திருவலகிடல், திருமெழுக்கிடல், திருநந்தனவனம் வைத்தல், திருமாலை கட்டிக்கொடுத்தல், திருவீதியிற் புல்லுச்செதுக்குதல், திருக்கோபுரத்திலும் திருமதில்களிலும் முளைக்கும் மரங்களையும் செடிகளையும் வேரோடு களைதல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்பவருக்குமே அன்னங்கொடுக்கப்படும் என்றும், சோம்பேறிகளுக்கு அன்னங் கொடுப்பதில்லை என்றும் நியமனஞ்செய்தால், நம்முடைய தேசங்களில் சற்புத்தியும் சமயபத்தியும் விருத்தியாகுமே. நம்மவர்கள் இவ்வுண்மையைச் சிந்தியாததென்னை!

தொழில்செய்து சீவனஞ்செய்யச் சத்தியில்லாதவர்களாகிய குருடர் முடவர் வயோதிகர் முதலானவர்களுக்குச் சரீர சுகத்தின்பொருட்டு அன்னங்கொடுப்பது மாத்திரம் போதாது; அவர்களுக்கு ஆன்ம சுகத்தின் பொருட்டு அறிவுடையோரைக்

கொண்டு கடவுளுடைய குணமகிமைகளைப் போதிப்பிக்கவும் வேண்டும்.

வறியவர் செல்வர் என்றும் நல்லொழுக்கமுடையவர் தீயொழுக்கமுடையவர் என்றும் அறியப்படாதவர்களாய் உள்ள வழிப்போக்கர்கள் பசித்து வந்தால், அவர்களை ஆராயாமல் அவர்களுக்கு ஒருபொழுது இருபொழுது அன்னங் கொடுத்தல்வேண்டும். அதுமட்டோ, அவர்கள் வியாதியினால் வருந்தினார்களாயின், அவர்களுக்கு இரக்கத்தோடு மருந்தும் பத்தியமும் கொடுத்து, அவர்களைப் பாதுகாத்தல் வேண்டும்.

சத்திரத்திலே வழிப்போக்கர்களுக்கு அவரவர் சாதிபாசாரத்துக்கும் சமயாசாரத்துக்கும் ஏற்பப் பூசை போசனங்களின் பொருட்டு வெவ்வேறிடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பூசையுடையவர்கள் பொருட்டுப் பூசைவேதிகைகள் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். பூசைக்கு உபயோகமாகும் பத்திர புஷ்பங்களின் பொருட்டுச் சத்திரத்துக்கு சமீபத்திலே திருநந்தனவனம் வைத்துப் பாதுகாத்தல் வேண்டும்.

பிராமணருள்ளே மெய்யறிவும் நல்லொழுக்கமும் உடையவர் சிலரொழிய மற்றவர்கள் அறியாமையினாலும், பொறாமையினாலும், துரபிமானத்தினாலும், பிராமணரல்லாத மற்றச் சாதியாரெல்லாரும் சமசாதியாரென்றும் கல்வியறிவொழுக்கஞ் சிறிதும் இல்லாதவர்களாயினும், தாங்களே உயர்ந்தவர்களென்றும், கல்வியறிவொழுக்க முடையவர்களேயாயினும் மற்றைச் சாதியாரெல்லாருந் தாழ்ந்தவர்களென்றும் பேசுவது எல்லாருக்குந் தெரியுமே. அவ்வியல்புடையவர்களைச் சத்திரத்துக்கு அதிகாரிகளாக்கினால், அவர்கள் சத்திர தருமங்களை ஒழுங்காக எப்படி நடத்துவார்கள்.

சத்திரத்துப் பிராமணர்கள், சத்திரத்துக்குத் தங்கள் சாதியார்கள் வந்தால், அவர்களுக்கு பாத்திரந் தகுந்த இடங்கொடுக்கின்றார்கள். மற்றைச் சாதியார்களுக்குள்ளே மாமிசபக்ஷணம் இல்லாதவர்களாய் சமயாசார முடையவர்களாய் உள்ள உயர்ந்த

சாதியர்களுக்கும் அவர்களல்லாத பலதிறத்துத் தாழ்ந்த சாதியர்களுக்கும், ஓரிடமே காட்டுகின்றார்கள். மாமிச பக்ஷணமுடையவர்கள் சமையல் செய்யப்பெற்றதும் சுத்திசெய்யப்படாததும் எச்சில் முதலியன நிறைந்ததுமாகிய இடத்தையே சமயாசாரமுடையலர்களுக்குக் காட்டிவிட்டால் அவர்கள் யாது செய்வார்கள்; அவர்களுக்குள்ளே சிலர் அருவருத்து, அங்கே சமையல் செய்யாது, எங்கேனுந் தோப்புண்டோ என்று தேடிச்சென்று, அங்கே சமையல் முதலியன செய்கின்றார்கள். அவர்கள் மழைக்காலத்தில் யாது செய்வார்கள்? சமையல் செய்யும்பொழுதேனும், பூசை செய்யும்பொழுதேனும், போசனஞ் செய்யும்பொழுதேனும் மழை பெய்கால் யாது செய்வார்கள்? சிலர் அவ்வசுத்தமாகிய இடத்தைச் சுத்திபண்ணி ஸ்நானஞ்செய்துகொண்டு சமையல் முதலியன செய்யும்பொழுது, சத்திரத்துப் பிராமணர்கள் அதனுள்ளே தாழ்ந்த சாதியாரையுங் கொண்டுபோய் விடுகின்றார்கள். அதனாலே பெருங்கலகம் விளைகின்றது. சில ஏழைகள் பயந்து, பாதிச்சமையலிலே எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியே போய்விடுகின்றார்கள்.

சமயாசாரமுடையவர்களுக்குப் பூசைசெய்தற் பொருட்டும் இராத்திரி காலத்திலே பூசையை வைத்துக்கொண்டு சயனித்தற்பொருட்டும் சத்திரத்தில் இடங்கொடாத பிராமணர்கள் சிலர் இராசசேவை செய்யும் அதிகாரிகள் வந்துவிட்டால், அவர்கள் அன்னிய சாதியார்களேயாயினும், அன்னிய சமயத்தார்களேயாயினும் அவர்களுக்குச் சமையல் முதலியவற்றின் பொருட்டுத் தங்கள் கட்டிலே இடங்கொடுக்கின்றார்கள்.

இராத்திரி காலத்திலே பூசையை வைத்துக்கொண்டு சயனித்தற்குச் சத்திரத்தினுள்ளே இடம்பெறாதவர்கள் தெருத்திண்ணையிலே வைத்துக்கொண்டு சயனிக்கின்றார்கள். அவர்களுள்ளே சிலர் பூசையைத் திருடரால் இழந்து வருகின்றார்கள். திருடர் முதலாயினோராலே பூசையை இழந்தவர்கள் அந்தப் பூசை வருமோவென்று நாற்பதுநாள் உபவாசஞ்செய்து பின்பு பிராயச்சித்தம் பண்ணிப் பூசையெழுந்தருளப் பண்ணிக்கொள்

ள்வேண்டும் என்று ஆகமம் விதிக்கின்றது. ஐயையோ இதற்கு அவர்கள் யாது செய்வார்கள்! இந்தப் பாவமெல்லாம் யாரைச்சாரும்!

தீர்த்தக்கரைகளிலே வேளாளர் முதலாயினோர் பூசை பண்ணும்பொழுது அப்பூசையிலே சலந்தெறிக்கும்படி வேட்டி தோய்ப்பவர்களும், அவர்கள் 'ஐயர், பூசையிலே சலந்தெறிக்கின்றதே' என்றால், ஓகோ! பிராமணருடைய வர்சோதகம் சூத்திருடைய பூசையிலே தெறிக்கலாகாதா! சூத்திரருக்குப் பூசை ஏது' என்று சொல்லித் துர்வார்த்தைகளினாலே வைபவர்களுமாகிய பார்ப்பார்கள். தங்கள் அதிகாரத்துட்பட்ட சத்திரங்களினுள்ளே அவ்வேளாளர் முதலாயினோர் பூசைசெய்ததற்கும், பூசையை வைத்துக்கொண்டு சயனித்தற்கும் புகுவார்களாயின், யாதுதான் பேசார்கள்! யாதுதான் செய்யார்கள்!

பெரும்பான்மையும் சத்திரங் கட்டுவிப்பவர்கள் வேளாளர் முதலிய சாதியார்களே. கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிபுகுந்தாற்போல அவர்கள் சத்திரத்திலே குடிபுகுந்த பார்ப்பார்கள், அவர்களுடைய அன்னவஸ்திர முதலியன வெல்லாம் அநுபவித்துக்கொண்டு தங்கள் சாதியாரை மாத்திரம் நன்கு மதித்து, அவர்கள் சாதியார்களை அவர்களிற்றாழ்ந்த சாதியார்களோடு சமப்படுத்தி அவமதித்து, அவர்களுக்குப் பலவாற்றானுந் துன்பமே செய்கின்றார்கள். இதனைக் கண்டும் கண்டும், அப்பார்ப்பார்களையே சத்திரங்களுக்கு அதிகாரிகளாக்குதற்கும், தாங்கள் வருந்தித்தேடிய பொருளெல்லாவற்றையும் அவர்களுக்கேப்பாழ்க்கிறைத்தற்கும் காரணம் யாதோ! அறியேம்.

இராசசேவைசெய்யும் அதிகாரிகள் சிலர், சில்வூர்களிலே வீடுகளில் வசிக்கப் புகுந்தால் வாடகைகொடுத்தல் வேண்டுமே என்று, உலோபத்தினாற் சத்திரங்களிற்றானே நெடுங்காலம் வசிக்கின்றார்கள். வழிப்போக்கர்கள் அச்சத்திரங்களிலே இடம் பெறலாம் என்று நம்பி, வெய்யிலினும் மழையினும் நெடுந்தூரம் நடந்து களைத்து வந்து அச்சத்திரங்களிலே பிரவேசிக்கும் போது, அவ்வதிகாரிகளுக்கு வாயிற்காவலாளர்களாயுள்ள சேவ

ர்கள் அவர்களைத் துர்வார்த்தைகளினாலே வைதும், பிடர்பிடித்துத் தள்ளியும், ஓட்டிவிடுகின்றார்கள். அவ்வழிப்போக்கர்கள் மானமிழந்து 'ஐயையோ! இவ்விராத்திரியிலே எங்கே போவோம்! எங்கே சயனிப்போம்! அடுத்த சத்திரமோ நெடுந்தூரம்; இடையிலே வீடுகளோ இல்லை; நேரமோ சென்றுவிட்டது; திருடர்பயமோ மிகுதியாம், என்று மனங்கலங்கி வருந்துகின்றார்கள்.

தர்மவர்கள் தாங்கள் வருந்தித்தேடிய பெரும் பொருள் கொண்டு தொடங்கிய சத்திரதருமங்களை நன்றாக நடத்துவியாது பராமுகர்களாய் இருப்பது தகுதியன்று வழிப்போக்கர்களுக்கு முகமலர்ச்சிகாட்டி இனியவார்த்தைகளைச் சொல்லி அவரவர் தகுதிக்கேற்ற இடங்கொடுத்து உபசரிக்கவல்ல யோக்கியர்களையே தங்கள் சத்திரங்களுக்கு அதிகாரிகளாக்கிச் சத்திர தருமங்களை நன்றாக நடத்துவிப்பார்களாயின், அவர்களுக்குப் புகழும் புண்ணியமும் உண்டாகும்.

பணம்.

---

## இனியவை கூறல்.

(46-ம் பக்கத் தொடர்ச்சி.)

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாறைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்து
வேருக்கு நெக்கு விடும். (நல்வழி.)

வலிய யானையின்மேல் பட்டுருவும் அம்பானது மெல்லிய பஞ்சினுள் பாய்வதில்லை. வலிய இருப்புப்பாறைக்குப் பிளவாத கருங்கற்பாறையானது பசியகொடிசெடிகளின் வேருக்குப் பிளவுறும். அதுபோல வலியசொற்கள் மெல்லிய சொற்களை வெல்லமாட்டாவாம்.

எப்போதும் தாழ்ந்த இடத்தில் நீரானது தங்கிநிற்பதன்றி உயர்ந்த இடத்தில் நிற்காது. அதுபோல யாவரிடத்திலும் அடக்கமும், இன்சொல்லும் உடையவனிடத்தில்தான் செல்வமும் கீர்த்தியும் நிற்கும். ஆகவே அவன் இம்மையின்பமடைகிறான். எல்லோரிடத்திலும் வஞ்சமற்ற எண்ணத்தோடும் அன்

புடன் இன்சொற்கூறி யொழுகுதலால் புண்ணியம் வளரும். புண்ணியம் வளரவே பாவம் தேயும். ஆகவே மறுமைச் சுகத்தையும் அடைகிறான். "அல்லவைதேய வறம்பெருகும் நல்லவை நாடி யினியசொலின், சிறுமையுணீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையு மின்பந்தரும்" என்பன பொய்யாமொழி.

யாவரிடத்திலும் இன்சொல் விளம்பும் இயல்புடைய ஒருவன் தரித்திரனாயிருந்தபோதிலும் அத்தரித்திரத்தால் ஏனையோர் வருந்துவதுபோல் அவன் வருந்தான். அவனே பணவலி துணைவலிகளாற் சிறந்தவனாவான். அவன் தரித்திரத்தால் வருந்துவதைக்கண்டு அனைவரும் அவனிடம் இரக்கங்கூர்ந்து அவனது கஷ்டத்தைத் தீர்க்க முன்வருவார்கள். ஆகையால் அவனது வறுமை வறுமையாகக் கருதப்படுவதன்று. "துன்புறூஉந் துவ்வாமையில்லாகும் யார்மாட்டும் இன்புறூஉ மின்சொல்லவர்க்கு" என்பது திருவள்ளுவனார் திருவாக்கு.

சில எஜமானர்கள் தமது வேலையாட்களை ஆடுமாடுகளினும் கேடாகக்கருதி அவர்களிடம் அற்ப காரியத்திற்கும் வெடுவெடென்று சீறிவிழுந்து அவசியமான கொடுஞ்சொற்களால் தூஷிக்கிறார்கள். இப்படி வன்சொற் பிரயோகஞ் செய்வதால் தங்களுடைய காரியங்கள் சுறுசுறுப்பாய் முடியும் என்பது இவரது எண்ணம்போலும். உள்ளதுங் கெட்டுப்போகுமேயன்றி காரியம் ஒழுங்காக நடவா. இன்சொல் விளம்பும் இயல்புடையவனாயின் யாவரும் ஏவாமலே ஒருகாரியத்தைச் செய்வார்கள். இனிய தென்றல்காற்று வீசினால் தோட்டத்திலுள்ள மரம் செடி கொடிகள் குளிர்ந்து தளிர்விட்டுத் தழைக்கும். கொடிய சுழல் காற்று வீசுமானால் வாடி வளைந்து இலைகள் உதிர்ந்து வருந்தும்.

இன்சொல்லென்றால் கேட்போரது காதுக்கும் மனதுக்கும் இனியனவாக இருத்தல் மாத்திரமன்று. அவ்வாறு கூறுவோன் மனதும் வஞ்சகத்தன்மை யற்றதாயிருக்கவேண்டும். கேட்போருக்கு உண்மையிலேயே நன்மை பயப்பனவா யிருக்கவேண்டும். அதனாலேயே,

"இன்சொலா லீர மளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்."

என்றார் தெய்வப்புலவர், சிலர் முகமலர்ச்சியோடும் சந்தனம் போன்ற சீதளமான வார்த்தைகளைப் பேசுவார்கள். ஆனால் வஞ்சகமே மனதில் குடிகொண்டிருக்கும்.

செங்கமலப் போதலர்ந்த செவ்விபோ லும்வதனந்
தங்குமொழி சந்தனம் போலும்—பங்கியரி
கத்தரியைப் போலும்இளங் காரிகையீர்! வஞ்சமனக்
குத்திரர்பான் மூன்று குணம். (நீதிவெண்பா.)

அவ்வாறு உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசிப் பசப்பும் கொடுமையைக் காட்டிலும் வேறு கொடுமையான காரியம் ஒன்றுமேயில்லை. அன்னவருடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தால் வந்தது மோசம். நமது நன்மையில் நாட்டமுடைய தாய்தந்தையர் உறவினர் மற்றுமுள்ள பெரியோர் கொடுமையான சொற்களைச் சொன்னாலும் அவை நமக்கு நன்மையே பயப்பனவாகும். வெங்காரமானது கொடிய வெப்பமுள்ளதானாலும் வியாதியை தீர்க்கும். விஷமானது உடல் புளிக்கும்படியாக அவ்வளவு குளிர்ச்சியுள்ளதாயினும் உயிரை வாங்கும்.

தன்னிடத்தில் பிறர் கடினமான சொற்களைப்பேசினால் அது தன்னை வருத்துவது கண்டும் அதேநிமிஷத்தில் பிறரிடம் ஒருவன் கடூரமான சொற்களை வழங்குதல் மடமையன்றோ? பிறர் தன்னிடத்து இன்சொற் கூறுதலால் தனக்கு அவரிடத்தில் திருப்தி யுண்டாவதைக் கண்டும் பிறரிடம் தான் இன்சொல் விளம்பாமலிருப்பது என் கொண்டோ?

இன்சொல் லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

என்றார் பெருநாவலர்.

ஆகலால் சகோதர சகோதரிகளே! நாம் எவரிடத்திலும் கொடுமையாகப் பேசுவோமாயின் நமது தாய் தந்தையரும் வெறுப்பார்கள். நமது சுற்றத்தவரும் நம்மை நெருங்கார். உல

கத்தோரும் அருவருப்படைந்து நீங்குவார்கள். ஆகவே நாம் ஆதரவற்றவர்களாவோம். இம்மைச் சுகமுமில்லை. மறுமையின் பழுமில்லை. ஆதலால் எவரிடத்தும் இன்சொற்கூறவே பழகுவோம். அதனால் எவ்விதத்திலும் நமக்கு நஷ்டமுமில்லை. கஷ்டமுமில்லை. "கீழோராயினுந் தாழவுரை" என்னும் ஔவை வாக்கியத்தைக் கடைப்பிடித்தொழுகுவோம். சுபம்!

ப. வீரப்பத் தஞ்சவராயன், கருவேலி.

---

## தாம்பூலத்தின் குணம்.

(47-ம் பக்கத் தொடர்ச்சி.)

வால்மிளகு முதலியன முன்சொல்லிய வாசனைத் திரவியங்களைக் கலந்து தாம்பூலத்தோடு தரித்துக்கொண்டால் அக்கினிமந்தம் திரிதோஷ கோபம் முதலானவை விலகும். முகத்தில் அழகுண்டாகும்.

களிப்பாக்கை தின்பதனால் நெஞ்சிற் கோழைக்கட்டும் அதிசாரமும் உண்டாகும். பித்த அரோசகம் போகும்

### சுண்ணம்பின் குணம்.

பிரபுக்கள் நல்முத்தைச் சுண்ணம்பாக நீற்றி வெற்றிலையோடு உபயோகிப்பதனால் நீடித்தபேதி, கபக்கட்டு, மலக்கிருமி, வயிற்றுநோய், வாத அரோசகம் இவைகள் நீங்கும்.

கற்சுண்ணம்பினால் உண்டவுணவு சீக்கிரம் சீரணமாகும். குடற்பிடி, நெய்ச்சிக்கல், பேதி, வாதகிரிச்சரம், பூரான்கடி முதலான விஷங்கள் காயங்களிலிருந்து ஒழுகும் இரத்தம் தீச்சுட்டபுண், சிரங்கு, தினவு மண்டைப்புற்று தலைநோய் சன்னி இவைகள் நீங்கும். சுக்கிலத்திற்குப் பலமும் தந்தங்களுக்கு உறுதியும் உண்டாகும்.

### உயர்ந்த சுண்ணம்பு செய்யும் முறை.

(இது அநேகமாய் போகீஸ்வரர்களுக்கும் தனவர்தர்களுக்கும் இன்றியமையாதது.)

## தாம்பூலச் சுன்னம்.

கற்பூரச்சிலையின் (கற்பூரச்சத்து) கற்சுண்ணாம்பைக் கஷுசம் செய்தாவது அல்லது வெண்கருவால் அரைத்துக் கட்டியாவது கரிப்போட்டில் வைத்து ஊதினால், பஞ்சுபோல் பொருமிச் சுன்னமாம். இப்படியே கல்நாரையும் அண்டத்தோலையும் ஊதினால் சுன்னமாகும். கெருடப்பச்சை, பவளம், முத்து இவைகளையும் மேற்கண்டபடி சுன்னமாக நீற்றலாம். இந்தச் சுன்னத்தை வெற்றிலையில் பூசி, கொட்டைப்பாக்குச் சீவலுடன் மென்று, முன்சாற்றை உமிழ்ந்துவிட்டுத் தாம்பூலத்தைத் தின்றால், சிலேத்துமங்களை யெல்லாம் அறுத்துப்போடும். இதற்கு உபாசச் சுன்னம் என்றும் பெயர். (போகமுனிவரும் சட்டமுனிவரும் அனுபவித்த முறை இதுவே.)

தாம்பூலத்தில் துவர்மிகுந்த காய்ச்சுக்கட்டி சேர்வதனால் அசைந்த பல் இறுகும் மலத்திலுள்ள கிருமிகள் நாசமாகும். பெரிய ஏலரிசியில் சுரக்கணம், பித்தம், பேதி, அரையாப்பு, வாந்தி, சிலந்திவிஷம், ரூட்சை, உஷ்ணபேதி, இருமல், வயிற்றில் கபம் நெஞ்சில் கோழை இரத்தபித்தம் இவைகளை நீக்கும்.

சிறு ஏலத்தால் வாய்நீரூறல் வாயினிப்பு தாகம் சலபேதி வியர்வைத் தலைவலி மிதகரம், சயம் இவைகள் நீங்கும். மலையேலத்தால் நாவறட்சி பித்தச்சொறி நீர்ச்சுருக்கு திரிதோஷவறட்சி அருசி இவைகளைநீக்கும். காட்டேலத்தால் வாந்தி கபம் பேதி அரோசகம் பைத்தியம் இவைகள் நீங்கும்.

சுக்கினால் விலாக்குத்தல் அஜீரணம், மார்பெரிச்சல் தோஷகுணம் புளித்தேப்பம் வெப்பம். ஆசனநோய் சுவாசம் காசம் ஜலபீநசம் நீரேற்றம் பேதி வாதகுன்மம் ஜலதோஷம் சீதகிரகணி வாதநோய் வயிற்றுப்பிசம் செவிக்குத்தல் முகநோய் சிரநோய் சூலைவலி சீதபேதி பலவித அரோசகம் வயிற்றுக்குத்தல் கபசீதசுரமுதலிய சுரரோகங்கள் ஆகிய இவைகள் நீங்கும் இச்சுக்கானது இன்னநோய்க்கு உதவும் இன்னநோய்க்கு உதவாது என்கிறதில்லை. இது திரிமூர்த்திகள் சொரூபம் என்று சொல்லும்

திரிகடுகின் முதல் மருந்தாயும் ஆயுள்வேதியர் கையில் எடுக்கும் ஆயுதமாயும் சிருஷ்டி கர்த்தாவாகிய பிர்ம்மதேவனை தனக்கு அதிதேவதையாகப் பெற்றிருப்பதினால் சகல ரோகங்களையும் போக்கும்.

லவங்கப்பூவுக்கு பித்தகோபம் அதிசாரம் வாந்தி உதிரக்கிரகணி ஆசனப்பிடுங்கல் க்ஷிணிவிந்து செவிநோய் சிவந்தமச்சம் கறுத்தமச்சம் விவுர்தம் சம்விவுர்தம் என்கிற வாதங்கள் கண்ணில் பூப்பட முதலிய நோய்கள் இவைகள்போம். மலக்கட்டும் சௌக்கியமும் உண்டாகும்.

இலவங்கப்பட்டையானது சுக்கிலநஷ்டம் அதிசாரம் பற்பல விஷங்கள் வாயை யனுசரித்த வாதம், சிலந்திவிஷம் பாம்புவிஷம் சுவாசகாசம் முதலிய நோய்களை விலக்கும்.

வால்மிளகினால் திரிதோஷ கோபம் குன்மம் வெட்டை முதலிய ரோகங்கள் நீங்கும் பசியுண்டாக்கும்.

சோம்பு என்னும் பெருஞ்சீரகத்தினால் யோனி ரோகம் வயிற்றுவலி சுரம் அசீரணம் வயிற்றுப்பிசம் நுரைத்த இருமல் பீனிசம் சுவாசம் அதிக தும்மல் பீலிகம் இவை நீங்கும்.

சாதிக்காய்க்கு விந்துநஷ்டம் அதிசாரம் சலநோய் இரைப்பு இருமல் உஷ்ணவாத கிராணி முதலிய ரோகங்கள் நீங்கும் பித்த பயகம் அதிகரிக்கும்.

ஜாதிபத்திரிக்கு அழல் சுரம் கிராணி சலமந்தபேதி இவை நீங்கும் பத்தியமும் சுக்கிலபெருக்கும் உண்டாகும்.

குங்குமப்பூவினால் சீரணசுக்கிலம் நாவறட்சி குடல்விருத்தி பெகநீர் கீல்பிடிப்பு கபாதிக்கம் வைத்தியம் மண்டைவலி கருவிழியில் படர்கின்ற பூ கண் நோவு வாந்தி ஜலபீநசம் காதுமந்தம் நீரேற்றம் இவைகள் தீரும்.

கோரோசனைக்கு மேகநீர் மேகருட்சை பித்தகோபம் சிசுக்களுக்கு உண்டாகின்ற கணம்மாந்தம் முதலிய ரோகங்களும்

(இன்னும் வரும்)

க. ஞானபூபதி.

---

# மதிப்புரை.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—இப்பெயர் புனைந்த ஒரு ் சஞ்சிகையில் முதல் இரண்டு இதழ்கள் நமது பார்வைக்கு ்தது. இது டாக்டர் அன்னு தாமஸ் அம்மாள் அவர்களால் எழுதப் ்ற்று மாதர்கள் திலகமாய் விளங்கும் சென்னை கவர்னர் பெருமாட்டி ்லிங்டன் அம்மாள் அவர்களுடைய முகவுரையும் தீட்டப்பெற்றுள் ்து. இதில் குழந்தைகள் வளர்க்கும் விதமும் அவர்களை எவ்விதப் ்யிற்சியுடன் நடத்தவேண்டுமென்கிற விதமும் இருமுதுகுரவர்க ்ாகிய பெற்றோர்கள் கவனிக்கவேண்டிய பற்பல அபூர்வ விஷயங்க ளும் மலிந்து பிரகாசிக்கின்றன. சிசுக்களின் விஷயத்தைப் பற்றி அநேக கல்விமான்களால் முன்னர் எழுதப் பெற்றிருப்பினும்,

“பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெறும்பேதை அறிவாளோ.”

என்ற தாயுமான வள்ளல் கருத்திற் கிணங்க பூரண கல்வி பாண்டித்தி ்யம் வாய்ந்த பெண்பாலாகிய மாதுஸ்ரீ. டாக்டர் அன்னுதாமஸ் அவர் எழுதியிருப்பதானது சாலச்சிறப்புடைத்தாம் என்பது வெள் ளிடை மலைபோல் விளங்கும்.

வருட சந்தா ரூ. 3-0-0.

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும், திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்,

தமிழ் வைத்தியம்:— இதனுடைய முதல் தொகுதியின் முதல் சஞ்சிகை ரெப்பெற்றேம். இது கோவிற்பட்டி தமிழ் வைத்திய ்ங்கத்தினின்று ஷை சங்க அமைச்சர் சுவாமி விருதை, சிவஞான ்யாகிகள் அவர்களால் வெளியிடப் பெறுகிறது. இப்பத்திரிகையில் ்யோகிகளுக்கு வேண்டிய பிர்ம்ம கற்பமும் உலகர்க்கு வேண்டிய ்ருந்துகளும் அவ்வவற்றின் விபரங்களும் தெளிவாக விளக்கப் பெற் ்ள்ளன. இன்னும் வைத்தியர்கள் தத்தமக்குள்ள சந்தேக விபரீதங் ்ளை நிவர்த்தித்துக்கொள்ள ஓர் ஆசானைப்போன்று பிரகாசிக்கின்றது. ்மிழ் சித்த மருத்துவங்களும் சித்தர் மருத்துவ முறையின் கருத்து ்களும் வடமொழி ஆயுர்வேத மருந்துகளும் விளக்க உரையுடன் சித்த நூற்களின் மேற்கோள் தாங்கி உலாவுவதானது தமிழ் நாட்டின் வைத்தியர்கட்கெதிர்பாராத ஓர் அதிர்ஷ்டம் என்றேசொல்லவேண்டும்.

வருட சந்தா ரூ. 3-0-0.

---

தமிழ் வைத்திய சங்கம், கோவிற்பட்டி, என்ற விலாசத்திற்கு எழுதப் பெறலாம்.

# ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

# வேதாந்த பாஸ்கரன்

## என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது

## ஞாயமா! ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனையுண்ணமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை கெடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும், ஏனெனில் சிலர் எழுதிய சாடு முரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயும், சமாசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ 1—0—0

யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.

[illegible]ரிகை ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி அவர்களால் [illegible] விஜயபுரம்
[illegible]நிதி அச்சியந்திரசாலையில் பதிப்பித்துப் பிரசுரிக்கப்பெற்றது.